**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 21/2023</u>**

பெயர் : சித்ரா P.W.1. Cross

க/பெ. : கார்த்திகேயன்

தேதி : 26.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>2ம் பிரதிவாதி தரப்பு</u> **<u>குறுக்கு விசாரணை :</u> –**

1. நானும் 1ம்பிரதிவாதியும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். எனது தந்தையாரின் பூர்வீகம் கருவாழக்கரை கிராமம் ஆகும். எனது கணவரின் பூர்வீகம் ராதாநல்லூர் என்றால் சரிதான். எனது கணவர் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். நான் பணிநிமித்தமாக கடந்த 27 ஆண்டுகளாக வெளியூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சொத்தை 2ம் பிரதிவாதி அவரது சொத்து என கூறிவருவதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் எனது அக்காவான 1ம் பிரதிவாதியிடம் ஏற்கனவே பணம் கொடுத்திருந்தேன். அந்த பணத்திற்காக தாவா சொத்தை 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்தார். தாவா சொத்தின் விஸ்தீரணம், புல எண் மற்றும் நான்கெல்லை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவா சொத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 28.02.2023ம் தேதி நான் நெய்வேலியில் இருந்தேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை கிரயம் பெற்ற போது அதற்கான பத்திரங்களை யார் வாங்கினார்கள் என்றால் எனது அக்கா தான் வாங்கினார்கள். அதற்கான செலவை எனது அக்கா தான் செய்தார் என்றால் சரிதான். அந்த பத்திரம் எழுதுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் 1ம் பிரதிவாதிதான் செய்தார் என்றால் சரிதான். பத்திரமானது எந்த சார் பதிவாளர் அலுவகத்தில் பதிவு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாசாஆ 1 ஆன கிரய ஆவணத்தில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்ற விபரம்

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாசாஆ 1 ஆன ஆவணம் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அக்காவிற்கு தான் தெரியும்.

3. வாசாஆ 1 ஆன ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேனா என்றால இல்லை. அதை என் அக்கா என்னிடம் பதிவு செய்து கொடுத்தார். வாசாஆ 1 ஆன ஆவணம் எந்த தேதியில் எழுதி பதிவு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 01.10.2010 அன்று ஒரு எழுத்து மூலமான கிரய உடன்படிக்கை தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உடன்படிக்கைபடி தாவா சொத்திற்கு கிரய தொகை ரூ. 1,05,000/– என நிர்ணயம் செய்து அன்றைய தினமே ரூ. 90,000/– ஐ முன்பணமாக 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அன்றைய தினமே 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் வசத்தை 2ம் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

4. இந்த உடன்படிக்கைபடி 1ம்பிரதிவாதி நடக்க தவறியதால் 2ம் பிரதிவாதி மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 39/2012 என்ற வழக்கை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்து கடந்த 31.10.2014 அன்று 2ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பு பகரப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து 1ம் பிரதிவாதி நாகப்பட்டிணம் மாவட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு எண். 1/2015 என மேல் முறையீடு செய்து அந்தமேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண். 39/2012 என்ற வழக்கின் தீர்ப்பினை ஒத்து மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண். 321/2018 ஆனது நிலுவையில் இருந்த போது Draft Sale Deed தயார் செய்து Test Batta கட்டி ஆய்வு செய்கையில் மேற்படி வாதியும் 1ம் பிரதிவாதியும் கூட்டு சதி செய்து தாவா சொத்தை பொறுத்து ஒரு பெயர் அளவிலான ஆவணம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல.

5. 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரய

ஒப்பந்தம் நிலுவையில் உள்ள சமயத்தில் 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த பெயர் அளவிளான 30.01.2021 தேதியிட்ட கிரய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 1 ன் மூலமாக எனக்கு எவ்வத சொத்துரிமையும் ஏற்படவில்லை என்றால் சரில்ல. 2ம் பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ தாவா சொத்து சம்பந்தமாக என்னிடம் எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி சிறிய குடிசை ஒன்றை கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

6. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாததாலும், வாசாஆ 1 ஆன ஆவணம் செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்பதாலும், தாவா சொத்தை பொறுத்து நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை 2ம் பிரதிவாதி தான் பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. யார் பராமரித்து வருகிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்த போது தாவா சொத்து எனது வசத்தில் இல்லை என்றால் சரிதான்.